***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXV BNSS)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT Mannargudi***
***CC.No. 74/2023 – P.W. 1 (LW3)***

| | |
|---|---|
| *Name* | சிவசண்முகம் |
| *Father/Husband's Name* | கோவிந்தராஜ் |
| *Village* | அடியக்கமங்கலம் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *44* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து நீடாமங்கலம் தாலுக்கா பெருமாள் லகரத்தில் கிராம நிர்வாக அலுவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 21.06.2022ம் தேதியன்று களத்தூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். அன்றையதினம் கீழாளவந்தசேரி கிராமத்தின் பொறுப்பு நிர்வாக கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தபோது காலை 09.30 மணியளவில் அந்த கிராமத்தை சேர்நத வடக்கு குடியான தெருவில் வசிக்கும், ராஜாப்பா என்பவர் போன் மூலமாக எனக்கு அந்த கிராமத்தை சேர்ந்த கமலா பட்டாபிராமன் என்பவருடைய இடத்தில் அங்கு நின்ற ஒருவர் கல்டா பெல்ட்டால் மயிலை அடித்துவிட்டதாக தகவல் கூறினார். நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். மயிலை அடித்தவரை விசாரித்தபோது அவர் அமரன் த/பெ. வேங்கையன் என்று என்னிடம் சொன்னார். ஆஜர் எதிரி தான் அவர். பிறகு உடனடியாக வனத்துறைக்கு தகவல் கூறினேன். பிறகு அவர்களிடம் எழுத்துப்பூர்வமான மேல்நடவடிக்கை எடுக்க கோரி புகார் மனு அளித்தேன்.

நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தா்ன. அதில் கையொப்பம் என்னுடையது தான். மேற்படி புகார் மனு அசா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வனத்துறை போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவ காலத்தில் பணிபுரிந்தது களத்தூர் கிராமம். களத்தூர் என்பது தனி கிராமம். கீழாளவந்தசேரி என்பது தனி கிராமம். மேற்படி கிராமத்திற்கு தனி நிர்வாக அலுவலர் உள்ளார். அவை அனைத்தும் நீடாமங்கலம் வருவாய் வட்டாட்சியர் ஆளுகைக்கு உட்பட்ட பகுதி ஆகும். தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவல் நடத்தை விதிகள் என்று இரண்டு பாகமாக உள்ளது என்றால் சரிதான்.

கீழாளவந்தசேரிக்கு பொறுப்பு என எந்தவிதமான எழுத்துப்பூர்வமான உத்தரவும் கிடையாது. என்னுடைய வருவாய் அலுவலர் பணி விதிகளின் படி நாங்கள் விடுப்பு எடுக்கவேண்டும் என்றால் எங்களுடைய உயர் அதிகாரி வட்டாட்சியரு்கு எழுத்துப்பூர்வமான விண்ணப்பம் அளித்து அவர் அனுமதித்து சம்பந்தமப்பட்ட கிராம நிர்வாக அலுவலரை அந்த கிராமத்தில் இருந்து விடுவிக்கவும், அந்த கிராமத்திற்கு என்னை நியமிக்கவும் உத்தரவு பிறப்பிக்க வேண்டும் எ்னறால் சரிதான். கீழாளவந்தசேரிக்கு சம்பவ காலத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்தவர் யார் என்றால் ராஜ்குமார்.

எந்தவிதமான குற்ற செயல் குறித்து மேலதிகாரிக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் 3 நகல்கள் தயாரிக்க வே்ணடும் என்றும், எந்த அதிகாரிக்கு தகவல் தெரிவிக்கிறோனோ அவருக்கு ஒன்றும், அதனுடைய நகல் வருவாய் வட்டாட்சியர் நீடாமங்கலத்திற்கு ஒன்றும், என்னுடைய கை கோப்பிற்கு இருக்க வேண்டும் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் என்னிடம் குறியீடு செய்யப்பட்ட ஆவணம் அதுபோன்று தயாரித்ததாக இல்லை.

யாராவது குற்ற செயல் குறித்து எனக்கு தகவல் சொ்னனால் தகவல் சொன்னவர் பற்றி ஒரு புகாரை எழுத்தபூர்வமாக வாங்க வேண்டும். அந்த புகாரின் அடிப்படையில் நானும், உதவியாளர் சம்பவ இடத்திற்கு சென்று அந்த சம்பவம் உ்ணமை என தெரிந்து கொண்டு அதன் பின்னர் தான் சம்பந்தபட்ட அதிகாரிக்கு புகார் தயாரிக்க வேண்டும் என்றால் சரிதான். என் மூலுமாக குறியீடு செய்யப்பட்ட ஆவணத்தில் ராஜாப்பா த/பெதங்கராசு போன் மூலமாக சொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

சம்பந்தப்பட்ட அமரனை சம்பவ இடத்தில் கீழாளவந்தசேரியில் பொதுமக்கள் பிடித்து வைத்திருந்தார். நான் சென்றபோது பொதுமக்கள் 20 பேர் இருப்பார்கள். நான் சொல்லுகிற புல எண். 13/1 என்பது நான்கு பக்கம் அடைக்கப்பட்ட மா மரம், தென்னை

மரம் கொண்ட கொல்லை பகுதி ஆகும். பெரும்பாலும் ஜீன் மாதத்தில் குறுவைசாகுபடிக்கு தண்ணீர் வருகிற சமயம் என்றால் சரிதான்.

எதிரியை சார்ந்த சமூகத்தார் வயல்களில் உள்ள எலிகளை பிடிப்பதற்கு கிட்டி போடுவார் என்றால் சரிதான். கிட்டி என்பது முதல் நாள் இரவு சம்பந்தப்பட்ட வயலில் போட்டுவிடுவார்கள். எத்தனை எலிக்கு பிடிப்பட்டியிருக்கிறதோ அதை பொறுத்த காசு என்றால் சரிதான். புகாரில் பெண் மயில் சம்பவ இடத்தில் இறந்து கிடந்ததாக குறிப்பிட்டும், கல்டா பில்டா கிடந்ததாகவோ குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் போய் எதிரியை சம்பவ இடத்தில் விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். எழுதவில்லை. எழுத்தில் வடிவிக்கவேண்டும். நான் அதுபோல் எழுத்தில் வடிவிக்கவில்லை.

புகாரில் 5 வது வரியில் அடித்தல் திருத்தம் செய்யப்பட்டு காலை 09.00 மணி எனஎழுதப்பட்டு 10.00 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தான் செய்தேன். நான் side initial போடவில்லை. நான் அந்த பையனை பார்க்கும் போது 10.00 மணி இருக்கும். நான் சம்பவ இடத்திற்கு போகும் போதே வனச்சரகம் அதிகாரிகள் இருந்தார்கள். அவர்கள் கையில் தான் எதிரி இருந்தார். பச்சைகலர் ஜப்பில் தான் பையன் இருந்தார் என்று நான் ஜீப்பை பார்க்கவில்லை.

நான் செல்லும் போது forest அலுவலர்களை பார்த்தேன். சம்பவ சமயத்தில் நான் மேற்படி கிராமத்தில் நான் incharge இல்லை என்றாலும், என்னை forest officer தான் போன் பன்னி தான் வரவழைத்தார்கள் என்றாலும், அவர்கள் சொல்லசொல்ல தான் புகார் எழுதப்பட்டது என்றால் சரியல்ல. இந்த புகார் கொடுக்க தகுதியற்ற நபர் என்றும், அன்றையதினம் அந்த கிராம்ததில் duty யே இல்லை என்றாலும் சரியல்ல. இந்த எதிரிக்கும், மயில் இறந்ததற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. எலி பிடிக்க சென்றவரை பிடித்து வைத்து இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.

## *DEPOSITION OF WITNESS*
## *(Chapter XXV BNSS)*

## *IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT*
## *Mannargudi*
## *CC.No. 74/2023 – P.W. 2 (LW1)*

| | |
|---|---|
| *Name* | கு. சுரேஷ்குமார் வனவர் |
| *Father/Husband's Name* | குப்புசாமி |
| *Village* | தஞ்சாவூர் |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *48* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 12.03.2026.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் தற்போது மன்னார்குடி வனசரகம் திருத்துறைப்பூண்டி பிரிவில் வனவராக பணிபுரிந்து வருகிறேன்.

கடந்த 21.06.2022 ம் தேதியன்று காலை 09.30 மணியளவில் எனக்கு தொலைபேசி மூலமாக பொறுப்பு கிராம நிர்வாக அலுவலரின் தகவலின் படி கீழாளவந்தசேரி கிராமத்தில் கல்டால் பெல்ட் மூலம் அணிலை வேட்டையாட முயன்ற நபர் அமரன் த/பெ. வேங்கையன் என்பவரால் மயில் அடித்து இறந்த நிலையில் கிடந்ததாகவும், அந்த நபரை பேச்சுக்கொடுத்து தோட்டக்காரர்கள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பிடிதது வைத்திருப்பதாக தகவல் வந்ததன் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு நான் சென்று பார்த்தபோது அந்த கிராமத்தில் உள்ள தனியர் ஒருவரது இடத்தில் கிடந்த இறந்த நிலையில் இருந்த பெண் மயிலை பார்த்து அங்கு இருந்த எதிரியிடம் விசாரணை செய்து அவரை கைது செய்து அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்று ஸ்தல மகசர் தயார் செய்தேன். மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் ஸ்தல மகசர் ஆகியவற்றை தயார் செய்தேன். **அவைகள் முறையே அசா.ஆ-2**

**மற்றும் 3 ஆக குறியிடு செய்யப்படுகிறது**. (ஒப்புதல் வாக்குமூலம் பெற வனவர் அதிகாரம் இல்லை என்பதால் ஆட்சேபணை செய்யப்படுகிறது). பின்னர் அவரை எனது தலைமையிலான தனிக்குழுவுடன் மேலதிகாரிக்கு தகவல் கொடுத்தும், குற்றம் சம்பந்தமாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்தும், நீதிமன்ற அறிவுரையின் படி இறந்த பெண் மயிலை பிரேத பரிசோதனை செய்து கனம் நீதிபதியின் அறிவுரையின் படி அவர் மீது 15 நாள் அடைப்பு காவலுக்கு உட்படுத்தினேன். இறந்த பெண் மயிலின் உடல் மற்றும் கல்டா பெல்ட் -1 ஆகியவற்றை Form 95 H நமூனா மூலம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். **மேற்படி Form 95 H நமூனா அசா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

எனக்கு மேல் இருக்கும் பதவி வனசரகர் அலுவலர் (Forest Range Officer), உதவி வனபாதுகாவலர், மாவட்ட வன அலுவலர். எனக்கு கீழ் வனகாப்பாளர் மற்றும் வனக்காவலர், வேட்டை தடுப்பு காவலர் என்ற பதிவி உண்டு என்றால் சரிதான். 1972 னுடைய wild life protection act ன் கீழ் தான் நாங்கள் செயல்பட வேண்டும் என்றால் சரிதான்.

பிரிவு 50(8) ல் Assistant conservator என்பது எனது மேல்உள்ள பதவி என்றால் சரிதான். அந்த பதிவிக்கு குறைவில்லாதவர்களோ, அரசால் அங்கீகரிப்பட்டவர்களோ அவர்கள் தான் ஒப்புதல் வாக்குமுலம் பெறுவது, பொருட்களை கைப்பற்றுவது, நீதிமனற்த்தில் ஒப்படைப்பது போன்ற பணிகளை செய்ய வேண்டும் என்றும், நான் முதல் விசாரணையில் சொன்ன எந்த பணிகளை செய்ய சட்டம் அனுமதிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

இந்த சம்பவம் சம்பந்தமாக எனக்கு எபபோது போன் வந்தது என்றால் காலை 09.30 மணிக்கு தகவல் கிடைத்தது. இந்த குற்றம் சமரசம் செய்து கொள்ளக்கூடிய குற்றம் என்றால் இல்லை. எதிரி இதுபோன்ற குற்றமே செய்யவில்லை என்றாலும், அதனால் தான் சமரசம் என்ற நடவடிக்கை செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லும்போது எத்தனை நபர்கள் இருந்தாரக்ள் என்றால் 20 ல் இருந்து 25 நபர்கள் இருந்தார்கள். இந்த சம்பவம் எப்போது நடந்ததாக தெரிந்துகொண்டேன் என்றால் காலை 09.00 மணியில் இருந்து 09.30 மணிக்குள் நடந்ததாக தகவல் சொன்னார்கள்.

கைது நமூனா யார் தயாரித்தது என்றால் நான் தான். எதிரிக்கு உறவினருக்கு தகவல் அளித்தேனா என்றால் அவரது மனைவி மற்றும் மாமானாருக்கு

தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த ஆவணம் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்பட்டது. எனக்கு தகவல் தெரிந்தபின்னர் தான் லெட்சுமணன் அழைத்து சென்றேன்.

எதிரியானவர் அணிலை அடிக்கவில்லை என்றும், அவர் எலி பிடிக்க சென்றவரை கிராமத்தார் தவறாக பிடித்து வைத்துக்கொண்டார்கள் என்று சொனனாலும் சரியல்ல. 1972 னுடைய wild life protection act எனக்கு எவ்வித அதிகாரம் இல்லை என்றாலும், எதிரி என்னிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும், எதிரியிடம் இருந்து எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல.

Sd/--J. Tamizhmurugan,
Judicial Magistrate No.I,
Mannargudi.